

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 156 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கலையரங்கம், விடுதிகள், உள்விளையாட்டு அரங்கங்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் த.ஆபிரகாம், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உயர்கல்வித் துறை சார்பில்

# ரூ.156.05 கோடியில் கல்விசார் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, அக். 30 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 156 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கலையரங்கம், விடுதிகள், உள்விளையாட்டு அரங்கங்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப் படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதி வாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இது நாள்வரை உயர்கல்வித் துறை சார்பில் 778 கோடி ரூபாய் செலவிலான கல்விசார் கட்டடங்கள் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் உயர்கல்வித் துறை சார்பில் கட்டி முடிக்கப் பட்டு திறந்து வைக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்:

**உயர்கல்வித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 14 கோடியே 19 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலும் மற்றும் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 7 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கல்லூரிக்கான புதிய கட்டடங்கள்;

சென்னை, தரமணி மையத் தொழில்நுட்ப வளாகத்தில் அமைந்துள்ள அச்சு தொழில்நுட்பப் பயிலகம், நெசவு தொழில்நுட்ப கல்லூரி, தோல் தொழில்நுட்பப் பயிலகம், வேதியியல் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் மாநில வணிகக் கல்வி பயிலகம் ஆகிய ஐந்து சிறப்பு நிறுவனங்களில், 49 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆய்வகக் கட்டடங்கள், வகுப்பறைகள், முதல்வர் அறைகள், தேர்வு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் கல்விசார் கட்டடங்கள்;

சென்னை, தரமணி, டாக்டர் தர்மாம்பாள் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 18 கோடியே 18 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடங்கள்;

மதுரை மாவட்டம், அண்ணா பல்கலைக் கழக மண்டல வளாகத்தில் 15 கோடியே 65 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடங்கள்;

திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் 7 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலையரங்கக் கட்டடம்;

பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 65 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவிலும், வேலூர், தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 65 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவிலும், போடிநாயக்கனூர், அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 66 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவிலும் மற்றும் காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் 8 கோடியே 67 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள உள்விளையாட்டு அரங்கங்கள்;

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் 4 கோடி ரூபாய் செலவில் உடற்கல்வி துறைக்கான தரைதள கட்டடம் மற்றும் நுண்கலை துறைக்கான முதல் தளக் கட்டடம்;

திண்டுக்கல், எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 10 ஆய்வகக் கட்டடங்கள்;

என மொத்தம் 156 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித்துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் த.ஆபிரகாம், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TNCF) நிதியிலிருந்து சைக்கிள் பந்தய வீரர் சூர்யபிரகாஷுக்கு ரூ.8,60,000/– மதிப்பிலான அதிநவீன பந்தய சைக்கிளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில்

# ரூ.98.21 கோடியில் 6 புதிய திட்டப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, அக். 30 -**

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.98.21 கோடி மதிப்பீட்டில் பெரும்பாக்கம், முடிச்சூர், அயனம்பாக்கம், வேளச்சேரி, சீக்கனான் ஏரிக்கரைகளை மேம்படுத்துதல் மற்றும் வேளச்சேரி மேம்பாலத்தின்கீழ் பகுதியை அழகுபடுத்துதல் ஆகிய 6 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 98.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும்பாக்கம், முடிச்சூர், அயனம் பாக்கம், வேளச்சேரி, சீக்கனான் ஏரிக்கரைகளை மேம்படுத்தும் பணிகள் மற்றும் வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் பகுதியை அழகுபடுத்தும் பணி, என மொத்தம் 6 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

சென்னைப் பெருநகரப் பகுதியின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்கு விரிவான திட்டமிடல் தேவை என்பதை உணர்ந்து 1972ல் மெட்ராஸ் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்ற பெயரில் தற்காலிக அமைப்பாக இருந்து, பின்னர் 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் கீழ் சட்டப்பூர்வ குழுமமாக மாற்றப்பட்டது.

சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்கால தேவைகளைக் கருதி பெருகிவரும் மக்கள் தொகைகேற்ப கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், நிலவகைப் பாடுகளில் உபயோக மாற்றங்களை முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ஐந்து ஏரிக்கரைகளை மேம்படுத்தும் பணிகள் மற்றும் வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் பகுதியை அழகுப்படுத்தும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது குறித்த விவரங்கள்:

**பெரும்பாக்கம் ஏரிக்கரை!**

சென்னை, பெரும்பாக்கம் ஏரிக்கரையை மேம்படுத்தும் விதமாக சுமார் 4.61ஏக்கர் பரப்பளவில் 23.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அழகிய இயற்கை எழிலுடன் கூடிய சுற்றுச்சூழல் குளம், பறவை கண்காணிப்பு கோபுரம், உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள்;

**முடிச்சூர் ஏரிக்கரை!**

செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அருகேயுள்ள முடிச்சூர் ஏரிக்கரையை மேம்படுத்தும் விதமாக சுமார் 2.40 ஏக்கர் பரப்பளவில்

20.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அழகிய பூங்கா, இப்பூங்காவில் செயல்திறன் பகுதி, பருவகாலத் தோட்டம், மழைத் தோட்டம் என பல்வேறு மேம்பாட்டுப் பணிகள்;

**அயனம்பாக்கம் ஏரிக்கரை!**

சென்னை, அயனம்பாக்கம் ஏரிக்கரையை மேம்படுத்தும் விதமாக சுமார் 4.26 ஏக்கர் பரப்பளவில் 20.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் படகு சவாரி, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதிகள் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள்;

**வேளச்சேரி ஏரிக்கரை!**

சென்னை, வேளச்சேரி ஏரிக்கரையை மேம்படுத்தும் விதமாக சுமார் 1.91 ஏக்கர் பரப்பளவில் 19.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலாவும் தளம், படகு சவாரி, மகரந்த சேர்க்கை பூங்காக்கள் உள்ளிட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள்;

**சீக்கனான் ஏரிக்கரை!**

செங்கல்பட்டு மாவட்டம், சீக்கனான் ஏரிக்கரையை மேம்படுத்தும் விதமாக சுமார் 13 ஏக்கர் பரப்பளவில் 9.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை, யோகா பயிற்சி பகுதி, ஏரியை பார்வையிடும் பகுதி என பல்வேறு மேம்பாட்டுப் பணிகள்;

**வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் பகுதியை அழகுபடுத்தும் பணிகள்!**

சென்னை, வேளச்சேரி மேம்பாலத்தின் கீழ் பகுதியை அழகுபடுத்தும் விதமாக 2.14 ஏக்கர் பரப்பளவில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அழகிய பூங்கா, இப்பூங்காவில் இயற்கை நடைபாதை, பசுமை பூங்கா, புல்வெளி, சிறுவர் விளையாட்டுத் திடல், சுவர் ஓவியங்கள், சிற்பங்கள், உடற்பயிற்சி இயந்திரங்கள் என பல்வேறு நவீன வசதிகளுடன் கூடிய மேம்பாட்டுப் பணிகள்;

என மொத்தம் 98.21கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை அரசு விருந்தினர் மாளிகை கூட்டரங்கில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் மாநில சிறுபான்மையினர் வாரியம் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில சிறுபான்மையினர் வாரியம் தலைவர் அருட்தந்தை ஜோ.அருண், துணை தலைவர் இறையன்பன் குத்தூஸ், மற்றும் சம்பத் ஆணைய உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




பிரதமர் அவர்கள் UWIN திட்டத்தை நேற்று (29.10.2024) இந்தியா முழுவதும் காணொலி மூலம் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசு பொது மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் UWIN திட்டத்தை துவக்கி வைத்தார். உடன் கழகப் பொருளாளர், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தமிழ்நாடு தேசிய நல திட்ட இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ், திருப்பெரும்புதூர் ஒன்றியக் குழுத்தலைவர், எஸ்.டி.கருணாநிதி, திருப்பெரும்புதூர் பேரூராட்சித் தலைவர் திருமதி.ச.சாந்தி, உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் மருத்துவர்கள் உள்ளனர்.